# M.C.O.P. NO. 2141/2019

**P.W.1** திருமதி.திவ்யபாரதி 21.02.2022

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. மசாஆ 1 முதல் தகவல் அறிக்கையை நான் கேள்விப்பட்டதன் அடிப்படையில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தை யார் நேரில் பார்த்தனர் என்று எனக்கு தெரியாது. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். விபத்து நடப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு எனக்கு திருமணம் நடைபெற்றது. எங்கள் சமூகத்தில் 2வது திருமணம் செய்யும் வழக்கம் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எனக்கு 2வது திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடந்து வருவதாக கூறுவது சரியல்ல. எனக்கு குழந்தைகள் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 1 முதல் 21 வரையிலான ஆவணங்கள் அனைத்தையும் படித்து பார்த்து தான் தாக்கல் செய்துள்ளேன். மசாஆ 3 ஆன மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எதிர்மனுதாரரின் வாகனமான லாரியின் இடதுபுற பகுதியில் சேதம் ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மசாஆ 15 ஆன மருத்துவமனை ரசீதுகளின் சான்றிடப்பட்ட நகல்கள் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் அசல் தொலைந்து விட்டதால் சான்றிட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மசாஆ 13, 14 ஆகிய ஆவணங்கள் இம்மனுவிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. மசாஆ 13 ஆன ஆவணத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரியின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் தற்போது எனது தகப்பனார் வீட்டில் தான் இருந்து வருகிறேன். எனது மாமனார் மாமியாரான 2, 3 மனுதார்கள் அவர்களது வீட்டில் குடியிருந்து வருகின்றனர். விபத்து நடந்த இடத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த ரோடு மேற்கிலிருந்து கிழக்காக செல்லும் நேரான ரோடு என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் லாரியானது ரோட்டின் இடதுபுற ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றும் எனது கணவர் தான் சரிவர கவனிக்காமல் இரு சக்கர வானத்தை அதிவேகமாக ஓட்டிச்சென்று நின்று கொண்டிருந்த லாரியின் இடது பின்புறத்தில் மோதி அவராக விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணமே இறந்து போன எனது கணவரின் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. அதனால் நஷ்டஈடாக

ரூ,.50,000/- மட்டுமே எனக்கு நஷ்டஈடாக கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. எனது கணவர் வேலை பார்த்ததாக சொல்லப்படும் வங்கியில் பிடித்தம் செய்த தொகையை நான் பெற்றேனா என்றால் நான் பெறவில்லை. அவர் 9 மாதங்கள் மட்டுமே வேலை செய்ததாலும் பிடித்தம் செய்த தொகையை கேட்டும் நான் மனு தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் துறையினர் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யாக கொடுத்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. மசாஆ 5 ஆன மாதிரி வரைபடம் தவறாக வரையப்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் விபத்தின் போது தலைக்கவசம் அணிந்திருந்தார். எனது கணவர் விபத்தின் போது தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றும் அவ்வாறு அணிந்திருந்தால் அவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு வாகனம் முன்னே செல்கிறது என்றால் பின்னால் செல்லும் வாகனமானது 10 மீட்டர் இடைவெளி விட்டு பின்னால் செல்ல வேண்டும் என்றால் சரிதான். 10 மீட்டர் இடைவெளி விட்டு எனது கணவர் மோட்டார் சைக்கிளை இயக்கியிருந்தால் மேற்படி விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்திற்கு முழு காரணம் எனது கணவரின் அஜாக்கிரதை தான் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட லாரியானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றம் நஷ்டஈடு வழங்கும்பட்சத்தில் 2ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

மசாஆ 10 ஆன காப்பீட்டு பத்திரத்தின் அசல் ஆவணத்தை நான் பார்க்கவில்லை. மசாஆ 13 ஆன எனது கணவரின் சம்பள சான்றிதழ் கணினி நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அது எங்கிருந்து யாரால் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்று இந்திய சாட்சிய சட்டம் 65 A ன்படி குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. எனது கணவருக்கு Star Health Insurance காப்பீட்டு நிறுவனத்தில் மருத்துவ காப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனது கணவரை மருத்துவமனையில் சேர்க்கும் போது Star Health Insurance கார்டை காண்பித்து தான் மருத்துவமனையில் அனுமதித்தோம் என்றால் சரிதான். எனது கணவரின் சிகிச்சைக்காக என்னுடைய

பணத்தை செலவு செய்தேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அது காணாமல் போய்விட்டது. அது சம்பந்தமாக எனது நிருபண வாக்குமூலத்தில் கூறவில்லை. எனது கணவரின் சிகிச்சைக்கான செலவுகள் அனைத்தையும் Star Health Insurance நிறுவனம் தான் செலுத்தியுள்ளது என்றும் நான் எந்த தொகையும் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன எனது கணவருக்கு யார் யார் வாரிசு என்பதை காண்பிக்க வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் தற்போது வழக்கு என்ன நிலையில் உள்ளது என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட லாரியானது 2ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மசாஆ 3 மற்றும் மசாஆ 10 ஆகிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மற்றும் வாகன காப்பீட்டு சான்றிதழ் ஆகியவை போலியானவை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட லாரியை 2ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யாததால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.